Regional Bulletin

Puducherry

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

நாள் 20.04.2024 சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

2ஆம் கட்ட மக்களவை தேர்தல் வரும் 26ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில் அரசியல் கட்சியினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

94 தொகுதிகளில் வரும் 7ஆம் தேதி நடைபெறவுள்ள, 3ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்புமனு பரிசீலனை இன்று நடைபெற்றது.

புதிதாக இயற்றப்பட்ட 3 குற்றவியல் சட்டங்கள் மூலம் நாட்டின் குற்றவியல் நீதி அமைப்பில் குறிப்பிடத்தக்க மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மக்களவை தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பதிவு இயந்திரங்கள் 3 அடுக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

2ஆம் கட்ட தேர்தல் (18)

17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 மக்களவைத் தொகுதிகளுக்கு முதல்கட்டமாக நேற்று நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து, 89 தொகுதிகளுக்கான 2ஆம் கட்ட மக்களவை தேர்தல், வரும் 26ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், இன்று மகாராஷ்டிரா மாநிலம் நான்டெட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு.

நரேந்திர மோடி, தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது, நேற்று நடந்து முடிந்த முதல்கட்ட மக்களவைத் தேர்தல் குறித்து, திருப்தி வெளியிட்ட அவர், ஜனநாயகத்தை காப்பதில் ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் அயராது உழைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். தொடர்ந்து, கர்நாடகா மாநிலம், சிக்கபல்லபுரா, பெங்களூருவிலும், திரு. மோடி பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

-இதனையடுத்து, பீகார் மாநிலம் பாகல்பூரில் இந்த தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, நாட்டில் ஏழைகள் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை பிஜேபி அரசு செயல்படுத்தவில்லை என குற்றம் சாட்டியுள்ளார்.

3ஆம் கட்ட தேர்தல் (12)

3ஆம் கட்டமாக அருணாச்சல பிரதேசம், அஸ்ஸாம், உத்தரபிரதேசம், மேற்கு வங்கம் உள்ளிட்ட 12 மாநிலங்களின் 94 தொகுதிகளில் வரும் மே 7ஆம் தேதி நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலுக்கான, வேட்புமனு பரிசீலனை இன்று நடைபெறுகிறது. வேட்புமனுக்களை திரும்பப்பெற வரும் 22ஆம் தேதி கடைசி நாளாகும்.

9 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 மக்களவைத் தொகுதிகளுக்கு, 4ஆம் கட்டமாக. மே 13ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அங்கு வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது. அதே நேரத்தில் ஆந்திராவில் 175 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும், ஒடிஷாவில் 28 தொகுதிகளுக்கு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் நடைபெற்று வருகிறது. வேட்புமனு தாக்கல் செய்ய இம்மாதம் 25 ஆம் தேதி கடைசி நாளாகும்.

தலைமை நீதிபதி (11)

புதிதாக இயற்றப்பட்ட 3 சட்டங்களுடன் குற்றவியல் நீதி அமைப்பை குறிப்பிடத்தக்க அளவில் மாற்றியமைக்க இந்தியா தயாராக உள்ளது என்று தலைமை நீதிபதி டாக்டர் சந்திரசூட் தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றிய அவர், பாரதிய நியாய சங்ஹீதா உள்ளிட்ட 3 குற்றவியல் சட்டங்களை இயற்றியதன் மூலம், நாட்டின் குற்றவியல் நீதி அமைப்பில் குறிப்பிடத்தக்க மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளதை குறிப்பிட்டு பேசினார். குற்றவியல் விசாரணையில் முன்னேற்றத்தைக் கண்டறிய நீதித்துறைக்கு செயற்கை நுண்ணறிவு உதவும் என்றார். செயல்முறைகளில் ஏற்படும் பிழைகளைக் கண்டறியும் நோக்கத்திற்காக இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என தலைமை நீதிபதி கேட்டுக்கொண்டார்.

கேரளா (11)

கேரளாவில் மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், முக்கிய அரசியல்கட்சிகள் முழுவீச்சில் தேர்தல் பிரச்சாரம் செய்து வருகின்றன. காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி. பிரியங்கா காந்தி, இன்று சாலக்குடி, பத்தனம்திட்டா மற்றும் திருவனந்தபுரம் தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. D. ராஜா, இன்று வயநாட்டில், இடசாரி ஜனநாயக முன்னணிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்கிறார்.

இந்நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவாக திருவனந்தபுரத்தில், பாஜக மூத்த தலைவரும், மத்திய நிதியமைச்சருமான திருமதி. நிர்மலா சீதாராமன் மேற்கொள்ள இருந்த தனது தேர்தல் பிரச்சாரப் பயணத்தை திடீரென ரத்து செய்துள்ளார்.

ஒடிஷா (08 )

ஒடிஷா மாநிலம், ஜார்சுகுடா மாவட்டத்தில் நேற்று மகாநதி ஆற்றில் படகு கவிழ்ந்த விபத்தில் உயிரழந்தவர்களின் எண்ணிக்கை 7ஆக உயர்ந்துள்ளது. 54 பேருடன் சென்ற படகு, லகான்பூர் அருகே திடீரென கவிழ்ந்து

விபத்துக்குள்ளானது. இதில் பயணம் செய்த அனைவரும், சத்தீஷ்கர் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒடிஷா மாநிலம், பர்கர்க் மாவட்டத்தில் அமைந்துள்ள கர்சேனுக்கு சுற்றுலா வந்ததாக கூறப்படுகிறது. இந்த விபத்து குறித்து குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கடற்படைத் தளபதி (06)

கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெனரல் ஆர். ஹரிகுமார், வரும் 30ஆம் தேதியுடன் ஓய்வு பெறுவதை ஒட்டி, கடற்படை துணைத் தளபதியாக உள்ள வைஸ் அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதியை அடுத்த தளபதியாக மத்திய அரசு நியமித்துள்ளது. தகவல் தொடர்பு மற்றும் மின்னணு போர் நிபுணரான இவர், 39 ஆண்டுகளாக பல்வேறு உயர் பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாக்குப்பதிவு நிலவரம் (13)

புதுச்சேரி மக்களவை தொகுதிக்கான வாக்குப்பதிவு நேற்று காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணிவரையில் நடைபெற்றது. 6 மணிக்கு மேல் வாக்குச்சாவடிகளில் காத்திருந்தவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்நிலையில், புதுச்சேரியில் மக்களவைத் தேர்தலில் 78.75 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன. இதில் புதுச்சேரியில் மட்டும் 79.69, காரைக்காலில் 75.65, மாஹேயில் 65.11, ஏனாமில் 76.8 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன.

புதுச்சேரியில், அதிகபட்சமாக பாகூர் தொகுதியில் 88.76 சதவிகித வாக்குகளும், காரைக்காலில் நெடுங்காடு தொகுதியில் 80.39 சதவிகித வாக்குகளும், பதிவாகி உள்ளதாகவும், நகரப் பகுதிகளில் வாக்கு பதிவு 77 சதவிகிதம் எனவும் தேர்தல் துறை தெரிவித்துள்ளது. இந்த தேர்தலில் நகரப் பகுதியை விட கிராமப்பகுதிகளில் வாக்குப்பதிவு சதவிகிதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

புதுச்சேரி தேர்தல் 1 (18)

புதுச்சேரி நாடாளுமன்ற தொகுதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றதை தொடர்ந்து இன்று, தேர்தல் பொதுப் பார்வையாளர் டாக்டா பியூஷ் சிங்லா மற்றும் புதுச்சேரி மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு. குலோத்துங்கன் ஆகியோர் தலைமையில், சீராய்வுக் கூட்டம், வாக்கு எண்ணிக்கை மையங்களில் ஒன்றான அரசு மகளிர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. வாக்குப்பதிவு குறித்து சீராய்வு செய்த பொதுப்பார்வையாளர் டாக்டர். பியூஷ் சிங்லா கூறுகையில், புதுச்சேரியில் நடைபெற்ற மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாகவும் சிறப்பாகவும், திருப்திகரமாகவும் நடைபெற்றுள்ளது என கூறினார். தொடர்ந்து பேசிய மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன், வாக்குப்பதிவு எண்ணிக்கை மையங்களில் CRPF, IRBN, மற்றும் மாநில காவல்துறை என 3 அடுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாகவும், கட்டுப்பாட்டு அறைகள் உட்பட வாக்குப்பதிவு எண்ணிக்கை மையங்கள் முழுவதும் 24 மணி நேரமும் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார். மேலும், அவர் கூறுகையில் வேட்பாளர்கள் எந்த நேரமும், வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு வந்து, அங்குள்ள பதிவேட்டில் கையெழுத்திட்டு, கண்காணிப்பு கேமராக்கள்

புதுச்சேரி தேர்தல் 2 (09)

காட்சிகளை நேரடியாக பார்த்துக்கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். புதுச்சேரியில் வாக்குப்பதிவு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு அளித்த வேட்பாளர்கள், முகவர்கள், அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துக்கொள்வதாக திரு. குலோத்துங்கன் கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தின் போது, மாவட்ட துணை தேர்தல் அதிகாரி திரு.வினயராஜ் உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரிகள், வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் கலந்து கொண்டனர்.

## வாக்கு மையங்கள் (09)

புதுச்சேரி மக்களவை தொகுதி தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று அமைதியான முறையில் நடைபெற்றது. வாக்குப்பதிவிற்குப் பின்னர் அனைத்து வாக்குச்சாவடிகளில் இருந்தும், வாக்குப்பதிவு இயந்திரங்களும், லாஸ்பேட்டையில் அமைந்துள்ள வாக்கு எண்ணும் மையங்களான, அரசு மகளிர் பொறியியல் கல்லூரி மற்றும் மோதிலால் நேரு அரசு தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள STRONG ROOM எனப்படும் பாதுகாப்பு அறைகளில் பலத்த பாதுகாப்போடு பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன.

## மகாவீர் ஜெயந்தி (09)

மகாவீர் ஜெயந்தி நாளை கொண்டாடப்பட இருப்பதை ஒட்டி புதுச்சேரி முழுவதும், மீன், இறைச்சி, மற்றும், இதர அசைவப் பொருட்களை விற்பனை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. இது குறித்து உழவர்கரை நகராட்சி ஆணையர் திரு.சுரேஷ் ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மீன் மற்றும் இறைச்சி விற்பனையை நாளைய தினம் தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மீறி செயல்படும் கடைகள் மற்றும் இறைச்சிக் கூடங்களுக்கு சீல் வைக்கப்படும் என்றும், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு விற்பனையாளர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

ஐபிஎல் (08)

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு டெல்லியில் நடைபெறும் ஆட்டத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி, சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியுடன் மோதவுள்ளது. நேற்று இரவு லக்னோவில் நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோ அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தியது. இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் 12 புள்ளிகளுடன் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி முதலிடத்திலும், 8 புள்ளிகளுடன் கொல்கத்தா அணி 2ஆம் இடத்திலும், சென்னை அணி 3ஆம் இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

2ஆம் கட்ட மக்களவை தேர்தல் வரும் 26ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில் அரசியல் கட்சியினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

94 தொகுதிகளில் வரும் 7ஆம் தேதி நடைபெறவுள்ள, 3ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்புமனு பரிசீலனை இன்று நடைபெற்றது.

புதிதாக இயற்றப்பட்ட 3 குற்றவியல் சட்டங்கள் மூலம் நாட்டின் குற்றவியல் நீதி அமைப்பில் குறிப்பிடத்தக்க மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மக்களவை தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பதிவு இயந்திரங்கள் 3 அடுக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. MS/CN/VM